8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

52. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளின் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 6–7–1995–ஆம் நாளிட்ட 94–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

53. 1–1–1987 முதல் 23–5–1988 வரையிலான காலங்களுக்கு எம்.எஸ். பிளாங்ஸ் விற்பனைக்காக, விற்பனையாளர்கள் செலுத்த வேண்டிய வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 19–10–1995–ஆம் நாளிட்ட 337–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

54. கன்னியாகுமரி மாவட்டம், விவேகானந்தாபுரம், விவேகானந்தா ராக் மெமோரியல் மற்றும் விவேகானந்தா கேந்திராவுக்குச் சொந்தமான டி.என். 74/ஏ–7492–ஆம் எண் மோட்டார் வண்டியை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் தொண்டு நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும் வரை மேற்சொன்ன மையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து, உள் (போக்குவரத்து–I) துறையின் 6-11–1995–ஆம் நாளிட்ட 206–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

55. கோயம்புத்தூர் நகர்ப் புற தொழுநோய் ஒழிப்புத் திட்டத்திற்குச் சொந்தமான டி.எண். 01/இ. 4632 மற்றும் டி.எண். 02/1036 மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் தொண்டு நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும்வரை மேற்சொன்ன மையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காகக் குறைப்பது குறித்து, உள்

(போக்குவரத்து-1) துறையின் 26-10-1995-ஆம் நாளிட்ட 196-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

56. வேலூர், கிருஸ்துவ கருத்துரை மையத்திற்குச் சொந்தமான டி.எண். 23-ஏ4612 மோட்டார் வண்டியை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் தொண்டு நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும்வரை மேற்சொன்ன மையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து, உள் (போக்குவரத்து-1) துறையின் 2-5-1995-ஆம் நாளிட்ட 630 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

24. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எண்பத்திரெண்டாவது அறிக்கை, 1995-96.

25. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எண்பத்தி மூன்றாவது அறிக்கை, 1995-96.

26. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எண்பத்தி நான்காவது அறிக்கை, 1995-96.

27. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை, 1995-96.

28. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை, 1995-96.

29. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஏழாவது அறிக்கை, 1995-96.

தமிழ்நாடு ... நூலகம்
4 - 5 2000
சென்னை-600 009